4.11.2025 O.S 390/2018 பி.வா.சா1 ராமதாஸ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

சர்வே எண் 571/11 ல் வாதிகள் அனுபவம் செய்து வரும் சொத்துக்களின் கதவு எண்கள் 75, 73/1 என்றால் 73/1 தான் உண்டு. கதவு எண் 75 கிடையாது. இந்த வீடுகள் கட்டப்பட்டு சுமார் 100 ஆண்டுகள் இருக்குமா என்றால் 20 வருடத்திற்குள் தான் இருக்கும். நான் சொல்வது தவறு என்றும் அந்த வீடுகளின் வயது 100 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரியல்ல. 8.2.2017 ல் வாதிகளும், நானும் சேர்ந்து ஒரு சம்மதபத்திரம் ஏற்படுத்தியதாக தாக்கல் செய்திருப்பது மோசடியானது என்றும், அவ்வாறு சம்மதபத்திரமான பி.வா.சா.ஆ 6 ஆவணத்தை எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எழுதிகொடுத்தார்கள். அதற்கு 10 சாட்சிகள் இருந்தார்கள். 2 சாட்சிகள் கையெழுத்து செய்தார்கள். பி.வா.சா.ஆ 6 ஆவணத்தில் வாதிகள் எந்த ஒரு கைரேகையும் செய்ய வில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 7 வுடன் கட்டிடம் கட்டுவதற்கான வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் உள்ளது தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 4 வருடத்திற்கு முன்பு பெற்றதாக பி.வா.சா.ஆ 7 தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2014 ம் ஆண்டுக்குரிய ரசீதாகும். அந்த உத்தரவு படி ஒரு வருட காலத்திற்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்பட வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதுநாள் வரை காலத்தை புதுப்பிப்பதற்கு எந்த ஒரு உத்தரவும் வாங்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 7 உத்தரவு பெறுவதற்கு உரிமை மூல ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

பி.வா.சா.ஆ 7 ஆவணத்தில் நான் கொடுத்ததாக கூறும் உரிமைமூலம் ஆவணம் பற்றி சொல்லவில்லை என்றால் ஆவணங்களை சமர்ப்பித்தேன். பி.வா.சா.ஆ 7 ன்படி சர்வே எண் 571/11 ல் கட்டிடம் கட்டுவதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் வீண் உரிமை கொண்டாடுவதற்காக பி.வா.சா.ஆ 7 என்ற மோசடியான ஆவணத்தை உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் பி.வா.சா.ஆ 8 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்பது பற்றி சொல்லவில்லை என்றால் காலிமனை எங்களது அனுபவத்தில் உள்ளதை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண் 571/12 ல் வடமேற்கு முனையில் ஒரு கழிப்பறை கட்டியுள்ளேன் என்றால் புல எண். 571/11, 12 சேர்ந்து கட்டியுள்ளேன். அந்த கழிப்பறையுடன் புல எண். 571/12 வடக்கு எல்கை முடிவடைகிறது என்றால் புல எண் 571/11, 12 ல் கழிப்பறைக்கு வடக்கே 4 அடி இடம் உள்ளது. அந்த கழிப்பறையில் மேற்கு நோக்கி நான் எந்தவித காம்பவுண்ட் சுவரோ, வேலியோ போடவில்லை என்றால் சரியல்ல. முள் வேலி அமைத்திருந்தேன். ஆணையர் பார்வையிட வந்த போது எந்தவிதமான முள் வேலியும் இல்லை என்றால் இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை செய்துள்ளதில் நான் இதுபற்றி சொல்லவில்லை என்றால் நான் சொல்லியுள்ளேன். புல எண் 571/12 க்கு வடக்கே புல எண். 571/8 சி1 உள்ளது என்றால் சரிதான். புல எண். 571/8 சி1 –ல் நான் எத்தனை செண்டு கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் 3 செண்ட் கிரையம் வாங்கியுள்ளேன். அந்த 3 செண்டிற்கு சுற்றி நான் காம்பவுண்ட் சுவர் அமைத்துள்ளேன். அந்த காம்பவுண்ட் சுவருக்கு

அடுத்த பக்கம் குளம் உள்ளது என்றும் அந்த குளத்தின் பெயர் தெரியுமா என்றால் குளத்திற்கு பெயர் இல்லை. குளம் உள்ளது. பி.வா.சா.ஆ 9 ல் சர்வே எண் 571/11,12 ஐ அளவீடு செய்ய இருப்பதாகவும் வட்டாட்சியர் அனுப்பியதாக சொல்லப்படும் அறிவிப்பில் செங்கோட்டை வட்டாட்சியர் அலுவலக முத்திரையோ, பதிவு முத்திரையோ இல்லை என்றால் முத்திரை இல்லை. ஆனால் சர்வேயர் அறிவிப்பு கொடுத்தார். குறுவட்ட அளவையரின் முத்திரை இல்லை என்றால் முத்திரை இல்லை. கையெழுத்து செய்துள்ளார். சர்வே எண் 571/11,12 ஐஅளவீடு கொடுக்க மனு கொடுத்ததாக சொல்வதும், தாலுகா அலுவலகத்தில் இருந்து அறிவிப்பு அனுப்பியதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு செங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து எந்தவிதமான அறிவிப்பும் சார்பு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நேரில் கொடுத்துள்ளார்கள். பி.வா.சா.ஆ 9 ஆவணத்தில் வாதிகள் எந்தவிதமான கையெழுத்தும் செய்யவில்லை என்றால் கைரேகை செய்துள்ளார்கள். சர்வே எண் 571/11,12 ஐ சர்வேயர் அளவீடு செய்து சர்வே எண் 571/11,12 க்குரிய தென்வடல் மற்றும் கிழமேல் அளவுகள் மற்றும் அதன் விஸ்தீரணங்கள் பற்றிய அறிக்கை என்னிடம் கொடுத்தாரா என்றால் அளவீடுகள் பற்றி கொடுக்கவில்லை. எல்கை மால் அளந்து கொடுத்தார்கள். சர்வே எண் 571/11,12 க்குரிய பழைய புல எண்கள் பற்றி எந்தவிதமான ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் ஆவணங்கள் உள்ளது. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 1 ஆகும். நான் வழக்கறிஞர் ஆணையர்

அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் அளவுகள் இல்லை. இடத்தை அளவீடு செய்து நீதிமன்ற ஆணையர் வரைபடம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சர்வேயர் கொடுத்த வரைபடத்தின்படி சர்வே எண் 571/12ல் உள்ள சொத்தானது அதற்கு மேல்புறமுள்ள சர்வே எண் 571/11ல் தெற்கு ஓரத்தில் கிழமேலாக 1.6 மீட்டர் உள்ளதாக சர்வேயர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இரண்டும் சேர்ந்து தான் உள்ளது. சர்வே எண் 571/11ல் உள்ள சொத்தானது வடக்கோரத்தில் 0.4 மீட்டர் அகலத்தில் கிழமேலாக சர்வே எண் 571/12ல் கலந்துள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டையும் நான் தான் அனுபவம் செய்கிறேன். ஆட்சேபனை இல்லை. சர்வே எண் 571/11ல் உள்ள சொத்துக்கள் ஏற்கனவே வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்களை வாதிகளுக்கு மீண்டும் கிரையம் கொடுப்பது போல் நான் மோசடியாக ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எழுதிகொடுத்த இருவரும் என்னுடைய பூர்வீக சொத்து கூறி என ஒப்புக்கொண்டு எழுதிகொடுக்க சொன்னார்கள். எழுதி கொடுத்தேன். வாதிகள் இருவருக்கும் எழுதபடிக்க தெரியாது என்றால் சரிதான். அவரது மற்ற குடும்பத்தினர்களுக்கு எழுதபடிக்க தெரியும். படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தார்கள். வாதிகளின் உறவினர்கள் யாரும் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. கிருஷ்ணசாமி, த/பெ.நாராயணசாமி என்பவர் வாதியின் தாய்மாமா ஆவார். முதல் சாட்சி கையெழுத்து செய்தவர் யார் என்றால் மணி என்பவர் ஆவார். சாட்சிகள் இருவரையும் வாதிகள் அழைத்து வந்தார். மணி என்பவர் வாதிகளின்

உறவினர் இல்லை என்றால் நெருங்கிய உறவினர்கள் இல்லை. ஒரே சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். வாதிகளின் வீடுகளுக்கு வடபக்கமுள்ள வாதிகளுக்கு பாத்தியப்பட்ட காலிமனையை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வா.சா.ஆ 5 ஆவணம் என்னால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தாத்தாவிடம் பணம் கொடுத்ததாக கூறி என்னையும், என் தம்பியையும் ஏமாற்றி வாங்கியுள்ளார்கள். என்னிடம் ரூ.4800/-தான் கொடுத்துள்ளார்கள். இது சம்பந்தமாக எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 5 ஆவணத்தை ரத்து செய்வதற்காக வாதிகள் தரப்பில் செலுத்தியுள்ள முத்திரை கட்டணம் சரியானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5 ஆவணத்தின் அடிப்படையில் பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் ரூ.2,65,000/- என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் இரண்டு நபர்களுக்கு தனிதனியாக ஆவணம் எழுதி கொடுத்தேன். வா.சா.ஆ 5 ஆவணத்தில் சங்கரையா ஒரு தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வாதிகள் சரியான முத்திரைகட்டணம் செலுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது மனைவி தமிழ்நாடு காவல்துறையில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறார். என் வீட்டிற்கு கீழ்புறம் பிச்சையா மகன் சுப்புராமன் என்பவர் உள்ளார் என்றால் சரிதான். அவரது சொத்தில் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக செங்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.38/24 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அது பொய் வழக்கு ஆகும். வாதிகளின் தூண்டுதலின் பேரில் அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என் மனைவியின் அதிகார துஷ்பிரயோகத்தை பயன்படுத்தி வாதிகள் மீது 25.01.2018 ம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மனைவி என்

வீட்டிற்கு வருவதே இல்லை. 1ம் வாதி முத்துசாமி மீது போலி மதுபாட்டில்கள் சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. பிராது தபசில் சொத்துக்கள் சர்வே எண் 571/11 ஆனது 1ம் வாதியின் தகப்பனாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், 1ம் வாதியின் தகப்பனார் எழுதி வைத்த உயில் ஆவணத்தின்படி வழக்கு சொத்துக்கள் அனைத்தும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. புல எண்.571/11க்கும் வாதிகளின் தகப்பனார் சுப்பையா நாயுடுவிற்கும் சம்பந்தம் இல்லை. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் நான் வீண் உரிமை கொண்டாடுவதற்காக தான் செங்கோட்டை நீதிமன்றத்தில் சுப்புலட்சுமி இறப்பு சான்று கேட்டு மோசடியாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. சுப்புலட்சுமி எனது தாயார் ஆவார். அவர் உயிரோடு உள்ளார். இறப்பு சான்றிதழை எனது தாயார் விண்ணப்பித்து எனது பாட்டியின் இறப்பு சான்றிதழை கோரினார் என்றால் சரியல்ல. எனது பாட்டி தனலட்சுமி என்ற நல்லம்மாள் இறப்பு சான்று தனியாக உள்ளது. பிராது தபசில் சொத்துக்களை வாதிகள் அனுபவம் செய்து வருவதை நான் இடைஞ்சல் செய்வதாக என் மீது காவல்துறை கண்காணிப்பாளர், காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஆகியோர்களிடம் 9.5.2018, 26.3.2018 தேதிகளில் வா.சா.ஆ 17,18ன் மூலமாக புளியரை காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இந்த தகவல் எதுவும் எனக்கு தெரியாது. நான் அப்போது ராணுவத்தில் பணிபுரிந்தேன். என் மனைவி காவல்துறையில் பணிபுரிந்து வருவதால் என் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் கொடுக்கப்பட்ட காலத்தில் நான்

உள்ளூரில் தான் இருந்தேன் என்றும், பணியில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு 1,2 சொத்துக்களில் எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி அவருக்கு பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.